காரியாப்பட்டி கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம்.

*369வினா— திரு. க. சுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடப்பாண்டில் இதுவரை கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், இராமநாதபுரம் மாவட்டம், காரியாப்பட்டி ஒன்றியப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் யாவை ?

(இ) அவற்றிற்குச் செலவிடப்பட்ட தொகைகளின் விபரம் யாது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) அண்டு (இ) : காரியாப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் 1974-75ம் ஆண்டில் கிராமப்புற வேலைவாய்ப்பு விரைவுத் திட்டத்தின்கீழ், மல்லாங்கிணறு கிராமத்தில் ரெங்கய்யா ஊரணியை ஆழப்படுத்தும் வேலை மேற்கொள்ளப்பட்டு, ரூபாய் 2,671 செலவில் முடிக்கப்பட்டது.

New Municipal Corporation.

*370 Q.—Thiru T. GANAPATHY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to form a Municipal Corporation comprising the Municipalities of Tirunelveli, Palayamkottai and Melapalayam ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) அண்டு (இ) : திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப்பாளையம் நகராட்சிகளை இணைத்து ஒரு மாநகராட்சி அமைக்கலாம் என்று அம்மூன்று நகர மன்றங்களும் தீர்மானித்தால், அதை மேற்கொண்டு அரசு பரிசீலிக்க முடிவு செய்துள்ளது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இந்த மூன்று நகர மன்றங்களும் பல அம்சங்களில் வேறுபட்டிருக்கின்றன. வளர்ச்சி அடைந்திருக்கிற தன்மையிலும், ஜனத்தொகையின் தன்மையிலும் வேறுபாடு கொண்டவைகளாக அமைந்துள்ளன. ஆகவே, இவைகளை ஒன்றாக இணைப்பதில் பல சிக்கல்கள் ஏற்படும் என்று அங்கே இருக்கிற மக்கள் கருதுவதால் அவர்களுடைய அபிப்பிராயத்தை அறிந்தபின்னால் இம்மாதிரி இணைப்பதற்கான முயற்சியில் அரசாங்கம் ஈடுபடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, எந்த நகர மன்றத்தை வேறு எந்த நகர மன்றத்தோடு சேர்ப்பதாக இருந்தாலும், அந்தந்த நகர மன்றங்கள் சேர்ப்பதற்கு ஒப்புதல் தந்தால்தான் பரிசீலனை செய்ய முடியும். இல்லாவிட்டால் முடியாது. இதைப்போல